## மங்கிப்போகும் மாநில சுயாட்சி!

# மாநிலங்களின் நிதிச் சுதந்திரம் குறைக்கப்படுவதால் மாநில சுயாட்சி சிதைக்கப்படுகிறது!

ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையிலான கூட்டுறவையும் ஒருங்கிணைவையும் மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட கூட்டாட்சித் தத்துவத்தின் அடித் தளத்தை அச்சுறுத்தும் சவால்கள் பாஜக ஆட்சியில் அதிகரித்து வருகின்றன. கூட்டாட்சித் தத்துவம் படிப்படியாக மங்கி, நிச்சயமற்ற இருட்டிற்குள் நுழைகிறதெனப் பலர் நம்புகிறார்கள். இந்த வீழ்ச்சிக்கு பல்வேறு காரணிகள் உள்ளன.

இந்திய அரசியலமைப்பு ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையே நுட்பமான அதிகாரச் சமநிலையை உருவாக்குகிறது. அண்ணல் அம்பேத்கர், 1948இல் அரசியலமைப்பு நிர்ணய சபையில் பேசுகையில், அரசியலமைப் பின்படி ஒன்றிய, மாநில அரசுகளின் ஒவ்வொரு நிறுவனமும் இறையாண்மையுடன் கூடிய தனித்த அதிகாரங்களுடன், இந்திய ஒன்றியத்தின் மத்தியில் ஒன்றிய அரசும், அதன் சுற்றுப்புறத்தில் மாநிலங்களும் இருக்கும் எனத் தீர்மானித்தார்.

கூட்டுறவுக் கூட்டாட்சியை மையப்படுத்தும் இப்பார்வை ஒற்றுமையையும் பன்முகத்தன்மையையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. இது மாநிலத்தின் சுயாட்சிக்கு மதிப்பளித்து மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அனுமதிக்கும் நிர்வாகக் கட்டமைப்பாகும். இந்த இருமை பலதரப்பட்ட தேசத்தில் ஒற்றுமையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது. அரசியலமைப்பு செயல்பாட்டுக்கு வந்தபோது, மாநிலங்களின் சுயாட்சிக்கு உரிய மரியாதையும் முக்கியத்துவமும் தரப்படும் என்று உறுதி கூறப்பட்டது. எவ்வாறாயினும், கடந்த காலம் தொட்டு, சமகாலம் வரையிலான நிகழ்வுகள், அனைத்து அதிகாரங்க ளும் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக மாற்றப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்து கின்றன. அதன்விளைவாக மாநில சுயாட்சி எனும் அரசியலமைப்புக் கனவு தொடர் கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. நாட்டுன் கூட்டாட்சி கட்டமைப்பும் சிதைவுக்கு உள்ளாக்கப்படுகிறது.

குறைந்து வரும் மாநில அரசுகளின் நிதிச் சுதந்திரம் மாநில சுயாட்சி தாக்குதலுக்கு உள்ளாவதைக் காட்டும் குறிகாட்டிகளில் ஒன்றாக விளங்குகிறது. பொருளாதாரக் கொள்கைகள், நிதி ஒதுக்கீடு ஆகிய விஷயங்களில் மாநிலங்களின் மீது ஒன்றிய அரசு அளவில்லாத அதிகாரத்தை செலுத்துகின்றது. நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் பெரிய பங்களிப்பை வழங்கும் தென் மாநிலங்கள் தங்கள் செலுத்தும் வரியை விட மிகக் குறைவான தொகையே ஒன்றிய அரசிடமிருந்து திரும்பப் பெறுகின்றன.

ஒன்றிய அரசின் பொருளாதார ரீதியான தாக்குதல் மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்காமல் இருப்பது வரை நீள்கிறது. ஒன்றியத்தில் ஆளும் கட்சியுடன் கொள்கை ரீதியாக மோதும் மாநில அரசுகளுக்கு குறைவான நிதி ஆதாரமே வளங்கப்படுகிறது. இத்தகைய நிதிப் பாகுபாடு மாநில சுயாட்சியை பலவீனப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மாநிலங்க ளின் வளர்ச்சியையும் பாதிக்கிறது. மாநிலங்களுக்கு இடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்மையும் அதிகரிக்கிறது. 14 ஆவது நிதிக் குழு மாநிலங்களுக்கான பங்கீட்டை அதிகரிக்கப் பரிந்துரைத்தாலும், ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படுகின்றன. மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தேவையில்லாத மேல்வரி (Cess), கூட்டுவரி (Surcharge) ஆகியவை அதிகரிக்கப்படுகின்றன.

> **அ**ண்ணல் அம்பேத்கர் அரசியலமைப்பின்படி ஒன்றிய, மாநில அரசுகளின் ஒவ்வொரு நிறுவனமும் இறையாண்மையுடன் கூடிய தனித்த அதிகாரங்களுடன், இந்திய ஒன்றியத்தின் மத்தியில் ஒன்றிய அரசும், அதன் சுற்றுப்புறத்தில் மாநிலங்களும் இருக்கும் எனத் தீர்மானித்தார்.
>
> ‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ போன்ற கொள்கைகள் கூட்டாட்சி முறை ஒழித்து, மாநில சட்டமன்றங்களின் அதிகாரத்தைச் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இக்கொள்கைகள் இந்தியாவின் பன்முகத்தன்மையைப் புறக்கணிக்கின்றன. இப்போக்கு நம் நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது.

சரக்கு, சேவை வரி (GST) மாநில, ஒன்றிய அரசுகளின் மாறுபட்ட வரிகளை ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஆனால், அது செயலுக்கு வந்தபோது ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு அளித்த உறுதிமொழி




களை நிறைவேற்றத் தவறிவிட்டது. சரக்கு, சேவை வரி (GST) ஒன்றிய அரசுக்கு கூடுதல் அதிகாரம் அளித்ததுடன், மாநிலங்களின் சொந்த வருவாய்த் திறனையும் குறைத்து ள்ளது. ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 23 விழுக்காடு பங்களிக்கக் கூடிய மேல்வரி (Cess), கூட்டுவரி (Surcharge) ஆகியவை மாநிலங்களுக்கு பிரித்தளிக்க வேண்டிய தொகுப்பில் இருந்து விலக்க ப்பட்டுள்ளன. இவ்வரி வருவாய் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. மேலும்,ஒன்றிய அரசு மாநிலங்களின் கடன் வாங்கும் திறனைக் கட்டுப்படுத்துகிறது. இது மாநிலங்களின் நிதிச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ போன்ற கொள்கைகள் கூட்டாட்சி முறை ஒழித்து, மாநில சட்டமன்றங்களின் அதிகாரத்தைச் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இக்கொள்கைகள் இந்தியாவின் பன்முகத்தன்மையைப் புறக்கணிக் கின்றன. இப்போக்கு நம் நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக விளங்குகி றது. ஒரே நாடு ஒரே தேர்தல் நிர்வாகத் திறனை மேம்படுத்தும் என்று கூறப்பட்டாலும் ஜனநாயகத்தின் பன்முகத்தன்மையைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது.

ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை நிர்வகிக்க வடிவமைக்கப்பட்ட தேசிய வளர்ச்சி கவுன்சில் போன்ற நிறுவனங்கள் வெறும் சம்பிரதாயங்களாக மாறிவிட்டன. திட்டக் குழு நிதி ஆயோக்காக மாறியதால், நிதித் திட்டமிடல், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் மாநிலங்களின் பங்கைக் குறைக்கும் வகையில் ஒன்றியமயமாக்கலை நோக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது.

மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் இருந்த கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகள் கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றியதால் பாதிக்கப்பட்டுள்ளன. பல்கலை மானியக் குழு நியாயமற்ற விதிமுறைகள் மூலம் மாநில அரசின் பல்கலைக்கழகங்களைக் தன்னாட்சித் திறனை சிதைக்கும் வழிமுறைகளை மாறியுள்ளன. அதே வேளையில் ஒன்றிய அரசின் கொள்கைகளைச் செயல்படுத்தவும் முயலும் வழிமுறைகளாகவும் செயல்படுகின்றன.

ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கை உள்ளிட்ட ஒன்றிய அரசின் கொள்கைகளை மாநில அரசுகளின் மீது சுமத்த முயல்கிறது. தேசிய கல்விக் கொள்கையை ஏற்காததால் நிதி வழங்கப்படாமல் இருக்கும் சமக்ரா சிக்ஷா திட்டத்தில் நிதியை நிறுத்தி வைப்பதன் மூலம் மாநில அரசுகளின் சுயாட்சியை ஒன்றிய அரசு கட்டுப் படுத்துகிறது.

கூட்டாட்சிக் கட்டமைப்பின் ஒரு அங்கமான இந்தியாவின் மொழிப் பன்முகத்தன்மை தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகுகிறது. 348 ஆவது அரசியலமைப்பு பிரிவு இந்தி பேசாத மாநிலங்களின் மொழியியல் விருப்பங்களுக்கு மதிப்பளித்து, இந்தியுடன் சட்டமியற்றும் நோக்கங்களுக்காக ஆங்கிலத்தைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. இருப்பினும் இந்தியில் மட்டுமே சட்டங்களை இயற்றும் ஒன்றிய அரசின் போக்கு 348 ஆவது அரசியலமைப்பு விதியை மீறுகிறது. அதிகரித்து வரும் இந்தி திணிப்பு தென், வடகிழக்கு இந்தியாவில் உள்ள மாநிலங்களின் கலாச்சார, மொழியியல் தனித்தன்மைகளைச் சிதைக்கிறது.



**பி.வில்சன்**
மாநிலங்களவை கழக உறுப்பினர்

மொழி என்பது தகவல் தொடர்புக்கான கருவி மட்டுமல்ல, மாறாக ஒருவரின் அடையாளம், அரசு நிர்வாகம் ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றன. மற்ற மொழிகளை விட இந்திக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், ஒன்றிய அரசு கூட்டுறவு கூட்டாட்சிக் கொள்கைகளைச் சிதைத்து, மக்கள்தொகையில் பெரும் பகுதியினரைப் புறக்கணிக்கிறது.

சமூக நீதி, இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றிலும் ஒன்றிய அரசின் செயல்பாடுகள் மாநில சுயாட்சியைப் புறந்தள்ளுகின்றன. கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்ய உதவும் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த மறுக்கும் ஒன்றிய அரசின் செயல் மற்றொரு வெளிப்படையான தோல்வியாகும். கடந்த 1931இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின்னர் இதுவரை சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. ஆகையால் தற்போ




தைய இந்தியாவின் உண்மையான நிலவரம் வெளிப்படவில்லை. ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை எடுக்க மறுப்பதன் மூலம், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த முயற்சிக்கும் மாநில அரசுகளைத் தடுக்கிறது.

இறுதியாக, கூட்டாட்சித் தத்துவச் சிதைவு பல்வேறு சவால்களை முன்வைத்து, மாநில சுயாட்சி, சமூகச் சமத்துவம் ஆகியவற்றை அச்சுறுத்துகிறது. அரசியலமைப்பின் 75 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் இப்பிரச்சினைகளைப் பற்றி சிந்திப்பது, பன்முகத்தன்மை கொண்ட நம் நாட்டில் ஜனநாயகத்தையும் நிர்வாகத்தையும் பாதுகாப்பதில் முக்கியமானது.

**(அரசியலமைப்புச் சட்டம் செயல்பாட்டுக்கு வந்து 75 ஆண்டுகள் ஆனதை ஒட்டி, The Week ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ள பிப்ரவரி சிறப்பு மலரில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழ்மொழியாக்கம் இது.)**



திருச்சி மாவட்டம், மணப்பாறை சிப்காட் பகுதியில் 400 ஏக்கர் பரப்பளவில் பாரத் சாரணர், சாரணியர் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா (Jamboree) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது. இந்த விழாவினை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து மருத்துவத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ வசதிகளை நேற்று முன்தினம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார்.



அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர் பேருந்து நிலையத்தில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாளை.அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



கோவை மேட்டுப்பாளையம் கூடலூர் நகராட்சி சால்சர் மைதானத்தில் வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமையில் கூடலூர் நகர செயலாளர் அ.அறிவரசு முன்னிலையில் வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் செ.அந்தோனிராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில், கழக மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, கழக மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், தலைமைக் கழக பேச்சாளர் கு.மொழிமாறன் ஆகியோர் வீரவணக்க நாள் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில், சி.ஆர்.ராமச்சந்திரன், ப.அருண்குமார், A.P.நாகராஜ். அவைத்தலைவர் புருஷோத்தமன், T.R.சண்முகசுந்தரம், T.P.சுப்பிரமணியன், அஷ்ரப் அலி, சோமு சந்தோஷ், சுரேந்திரன், SMT.கல்யாணசுந்தரம், S.P.சுரேஷ், கார்த்திக் ,சுரேஷ், முனுசாமி,வெங்கடேசன்,உதயகுமார் ,சுரேந்திரன், சிவகுமார், ரபிதின், சரண்யா, தினேஷ், மனோஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு முழுவதும் அரசுத் தொடக்கப் பள்ளிகளில்

# ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவும் பணி முடிந்தது!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஜன. 30 -

தமிழகம் முழுவதும் 22,931 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள் ளார். அரசுப் பள்ளி மாணவ - மாணவியருக்கு தொழில் நுட்பத்துடன் கூடிய கற்றல் சூழலை உருவாக்க தமிழ்நாடு முழுவதும் உள்ள 22,931 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (ஸ்மார்ட் கிளாஸ்) அமைக்கும் பணியை கடந்த ஜூன் 14ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கும் பணி முடிந்துள்ளது.



இறுதியாக நடந்த சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் அரசு மேனிலைப் பள்ளியில் முடிந்த இந்த ஸ்மார்ட் வகுப்பறை நிறுவும் பணியை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது: அரசுத் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் 11 லட்சத்து 76,452 மாணவ - மாணவியர் பயனடையும் வகையில் ரூ.455 கோடி மதிப்பில் 22931 திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளன. அதேபோல அரசுப் பள்ளிகளில் 8209 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் ரூ.519 கோடியில் அமைக்கும் பணியும் முடிய உள்ளது. இந்த இரண்டு திட்டங்களும், முழுமை அடையும் போது, 43 லட்சத்து 89 ஆயிரம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்.

மூன்றரை ஆண்டில் நாம் கல்வித்துறையில் நிறைய செய்துள்ளோம். தமிழ்நாட்டின் கல்வித் தரம் குறைந்துள்ளதாக ஆளுநர் தெரிவிப்பது கண்டனத்துக்குரியது. அவர் நாளொரு மேனியும் தமிழ்நாட்டைப் பற்றி ஏதாவது கூறிவருகிறார். ஒரு நாள் புகழ்கிறார். மறுநாள் எதிர்க்கிறார். மேலும், தேசிய கீதம் எப்போது பாடப்பட வேண்டும் என்று கூடத் தெரியாத நிலையில் இருக்கிறார். தமிழக கல்வித் தரம் பற்றி அவர் கூறுவது கண்டனத்துக்குரியது. ஆளுநர் கூறுவது என்னவென்றால், மாணவர்களுக்கு கூட்டல் கழித்தல் கணக்கு தெரியவில்லை என்கிறார். இது ஆசிரியர்களையும், மாணவர்களின் மனநிலையில் தாக்கத்தையும் ஏற்படுத்தும் செயல் ஆகும். குற்றம் சாட்டுவது போல சொல்கிறார். இது தவறு, எங்கள் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அரசுப் பள்ளிகளில் 2014ம் ஆண்டுக்கும் 2024ம் ஆண்டுக்கும் ஒப்பிடும்போது இடைநிற்றல் குறை ந்துள்ளது. மாணவர்களுக்கு மன அழுத்தம் இல்லாமல் புதிய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

## தைப்பூசத் திருநாள்:

# பழனிக்கு சிறப்பு இரயில்களை இயக்கிடுக!

### எம்.எம்.அப்துல்லா எம்.பி. ரயில்வே வாரியத் தலைவரிடம் கோரிக்கை!

புதுடெல்லி, ஜன. 30-

“தைப்பூசத் திருநாளை முன்னிட்டு சென்னை, மற்றும் நாகர்கோவிலில் இருந்து பழனிக்கு சிறப்பு இரயில்கள் இயக்கிட வேண்டும்” நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

வருகிற பிப்ரவரி 5ஆம் தேதி (5.2.2025) தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பழனிக்கு வரவிருக்கும் இலட்சக்கணக்கான பக்தர்களின் பாதுகாப்பான பயணத்தைக் கருத்தில் கொண்டு சென்னையிலிருந்தும் நாகர்கோவிலில் இருந்தும் பழனிக்கு சிறப்பு இரயில் இயக்கிட



விரைந்து நடவடிக்கை எடுக்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா அவர்கள் இந்திய இரயில்வே வாரியத் தலைவர் சதீஷ்குமார் அவர்களிடம் நேற்று (28.1.2025) கோரிக்கை வைத்தார்.

அதில் “தை மாதம் தமிழர்களுக்கு புனிதமான மாதமாகும். முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம் என்பர்.தைப்பூசம் ஆண்டுதோறும் தமிழ் மாதமான தை மாதம் பௌர்ணமி நாளில் வரும். இந்நிலையில் பழனியில் உள்ள புகழ்பெற்ற பழனி முருகன் கோவிலுக்கு ஆண்டு தோறும் இலட்சக் கணக்கான பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்துவதற்காக வந்து வழிபாடு நடத்துவது வழக்கம். இந்தக் காலகட்டத்தில் பழனிக்கு வருவதற்கும், அங்கிருந்து செல்வதற்கும் போக்குவரத்து தேவை கணிசமாக அதிகரிக்கிறது.

சென்னை மற்றும் நாகர்கோவில் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் ஏராளமான பக்தர்களின் பாது காப்பான பயணத்தைக் கருத்தில் கொண்டு போதுமான இரயில் சேவைகளை உறுதி செய்வது மிகவும் அவசியம்.

எனவே, இந்த முக்கியமான நாளில் பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பு இரயில்களை இயக்கி, தைப்பூசத் திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு சுமூகமான மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டுள்ளார்.